Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 314

செவ்வாய்க்கிழமை
07 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

கம்பளையில் கோரம்

## கார் மோதி 3 பெண்கள் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 7
கம்பளை தொலுவ பகுதியில் நேற்று மாலை பாதசாரிப் பெண்கள் மீது, காரொன்று மோதியதில் மூன்று பெண்கள் உயிரிழந்தனர்.
கம்பளை, தொலுவ பகுதி ஊடாக ☞11



## வல்லிபுர ஆழ்வாருக்கு நேற்று சமுத்திரத் தீர்த்தம்!

யாழ்ப்பாணம், ஒக். 7
வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் வங்கக் கடலில் பல்லாயிரக்கணக்கான ☞11

## பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு பதவி இறக்கத்துடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 7
யாழ்ப்பாணம்பொலிஸ்நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் சிலருக்கு, பதவி இறக்கத்துடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொறுப்பதிகாரிகளுக்கே இவ்வாறு பதவி இறக்கத்துடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.
பொலிஸ் தலைமையகத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில்

# இலங்கை தொடர்பான தீர்மானம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்!

பிரிட்டனின் கோரிக்கை ஏற்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 7**
**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், பிரிட்டனால் கொண்டுவரப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணை, வாக்கெடுப்பு இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரிட்டனின் கோரிக்கைக்கு அமையவே, வாக்கெடுப்பின்றி தீர்மானம் ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.** ☞11

## காணி உறுதி மோசடி; சட்டத்தரணி கைது!

வெளிநாட்டுப் பயணத்தடையுடன் பிணை வழங்கியது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஒக். 7
யாழ்ப்பாணத்தில் காணி உறுதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுப் பெண் சட்டத்தரணியொருவர் கைது செய்யப்பட்டார்.
அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதித்த நீதிமன்றம், பிணை வழங்கியும் உத்தரவிட்டது.
யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி பகுதியில் உள்ள காணியொன்றுக்கு உறுதிமுடிப்பை ☞11

## அனுமதியின்றித் தேடுதல் சட்டத்தரணிகள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 7
பொலிஸாரின் நடவடிக்கைகளைக் கண்டித்து, சட்டத்தரணிகள் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தெரியவருகின்றது. ☞11

காணி மோசடி

## இன்னும் சில சட்டத்தரணிகளுக்கு பொலிஸார் தீவிரமாக வலைவீச்சு!



யாழ்ப்பாணம், ஒக். 7
கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் உறுதி மோசடிகள் தொடர்பில், சட்டத்தரணிகள் சிலரைக் கைது செய்வதற்குக் கடந்த சில நாள்களாகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.
இந்த உறுதி ☞11

வேகக்கட்டுப்பாட்டை இழந்து

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞர் துயரச் சாவு



வவுனியா, ஒக். 7
வவுனியா - இராசேந்திரம்குளம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளொன்று நேற்று விபத்துக்குஉள்ளான ☞11

## சிங்கள ஆட்சியாளரை நம்பி போராட்டத்தைக் கைவிடோம்

சிவாஜிலிங்கம் அழுத்தம்திருத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 7
சிங்கள ஆட்சியாளர்கள் எவரையும் நம்புவதற்கு நாங்கள் தயாரில்லை. எனவே, எமது மக்களின் போராட்டம் தொடரும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். ☞11

யாழ். போதனாவில்

## 'ஓ பொசிடிவ்' குருதிக்கு தட்டுப்பாடு அதியுச்சம்

யாழ்ப்பாணம், ஒக். 7
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 'ஓ பொசிடிவ்' குருதி வகைக்குத் தற்போது அதி தீவிர தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். ☞11

**முச்சந்தி முரளி**

**'சட்டத்தைக் காக்கவேண்டியவை இப்ப தங்களைக் காக்க போராடுகினம் கண்டியளோ'**

## 13இனை வழங்குவோம் என்றவர்கள் மாகாணத் தேர்தலை நடத்தவில்லை

நாமல் ராஜபக்ச சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 7
தமிழர்களுக்குத் தீர்வாக, 13ஆவது திருத்தத்தை வழங்குவோம் என்று கூறியவர்கள், மாகாணசபைத் தேர்தலை நடத்தவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சுட்டிக்காட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 06.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4216 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 05 27 67 80 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 06.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1283 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 28 32 35 42 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 06.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0242 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 5 9 1 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 06.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2322 |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 26 47 68 75 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 06.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5974 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 9 8 7 0 3 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 06.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2004 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 28 45 49 60 |
| விசேட எழுத்து | T |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 06.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0090 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 25 29 45 |

# போராட்டத்தைத் தீவிரமாக்கும் மின்சாரசபைத் தொழிற்சங்கம்

கொழும்பு, ஒக்.7

மின்சாரப் பொறியியலாளர்கள் சங்கம் மற்றும் பிற தொழிற்சங்கங்கள் நேற்று முதல் தங்கள் தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்த தீர்மானித்துள்ளன.

துறைசார் அமைச்சரின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் பங்கேற்பது போன்றவற்றைத் தவிர்க்கவுள்ளதாகவும் அவை அறிவித்துள்ளன.

இலங்கை மின்சாரசபையின் மறுசீரமைப்பு தொடர்பான சட்டவரைவு 26ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அதற்கு எதிர்ப்புத்தெரிவித்துக் கடந்த மாதம் 4ஆம் திகதி முதல் மின்சாரத் தொழிற்சங்கங்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றன. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 06.10.2025 | தினம் | திங்கள்கிழமை |
| வெற்றி வாரம் | 0682 | | |
| ஆங்கில எழுத்து | T | வெற்றி இலக்கம் | 5 3 1 9 5 7 |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.10.2025 | தினம் | திங்கள்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2948 | ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 03 42 59 67 | | |

| சனிதா DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.10.2025 | தினம் | திங்கள்கிழமை |
| ஆங்கில எழுத்து | U | வெற்றி இலக்கம் | 25 48 75 77 |
| வெற்றி வாரம் | 5109 | | |

| லக்ன ராசி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.10.2025 | தினம் | திங்கள்கிழமை |
| துலாம் | | வெற்றி இலக்கம் | 06 20 46 59 |
| சீட்டிழுப்பு வாரம் | 4660 | | |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.10.2025 | தினம் | திங்கள்கிழமை |
| ஆங்கில எழுத்து | A | சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கம் | 60 62 64 67 | வெற்றி வாரம் | 2124 |

| அத கோடிபதி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.10.2025 | தினம் | திங்கள்கிழமை |
| ஆங்கில எழுத்து | U | வெற்றி இலக்கம் | 10 14 32 63 |
| வெற்றி வாரம் | 2774 | | |

| JAYODA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.10.2025 | தினம் | திங்கள்கிழமை |
| ஆங்கில எழுத்து | D | வெற்றி இலக்கம் | 03 12 17 60 |
| வெற்றி வாரம் | 2167 | | |

## ஜனாதிபதி மாளிகைகள் பராமரிப்புக்கு 8 கோடி ரூபா

கொழும்பு, ஒக்.7

இலங்கையின் எட்டு ஜனாதிபதி மாளிகைகளைப் பராமரிப்பதற்காகக் கடந்த ஆண்டில் மாத்திரம் 8 கோடியே ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 422 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், அநுராதபுரம், கண்டி, மஹியங்கனை, நுவரெலியா, கதிர்காமம், பெந்தோட்டை, மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் ஜனாதிபதி மாளிகைகள் அமைந்துள்ளன. இந்த எட்டு மாளிகைகளிலும் 392 பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் 16 சிவில் ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் உள்ள கணக்காய்வு அறிக்கையில் இந்தத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (எ-25-இ)


## வளர்ச்சியடையும் சுற்றுலாத்துறை

கொழும்பு, ஒக்.7

நாட்டின் சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சியடைந்துவருகின்றது என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிலிருந்துவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துவருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 49 ஆயிரத்து 697 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். பிரிட்டனிலிருந்து 10 ஆயிரத்து 752 பேரும், சீனாவிலிருந்து ஆயிரத்து 27 பேரும், ஜேர்மனியிலிருந்து 9 ஆயிரத்து 344 பேரும், அவுஸ்திரேலியாவிலிருந்து 9 ஆயிரத்து 105 பேரும் வந்துள்ளனர். இந்த வருடத்தின் கடந்த மாத இறுதி வரையில் 17 இலட்சத்து 25 ஆயிரத்து 494 சுற்றுலாவிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர். சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு செயற்பாடுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையும், சுற்றுலா அமைச்சும் முன்னெடுத்துவருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## நிறைவேற்றதிகாரத்தைப் பலப்படுத்தும் அநுர அரசு

### ஹர்ஷன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.7

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாகக் கூறி ஆட்சியேற்றவர்கள் இன்று அதை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுத்துவருகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கஜ் உண்பதற்காக கோடிக்கணக்கில் நிதி செலவிட்டுள்ளார் என்று இந்த அரசாங்கம் குற்றஞ்சாட்டியது. ஆனால் தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதனைவிட பெரும்தொகையைச் செலவிட்டிருக்கின்றார்.

ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளுக்கு ஓரளவுக்கேனும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். ஆனால் அரசாங்கம் வெறுமனே அரசியல் பழிவாங்கல் நோக்கத்தில் மாத்திரமே அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவருகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## நாணயநிதியத்தை மகிழ்விக்கவே அரசால் மின்கட்டணம் அதிகரிப்பு

### மின்பாவனையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.7

சர்வதேச நாணயநிதியத்தை மகிழ்விப்பதற்காகவே, மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தீர்மானத்தை எடுத்த பின்னர் பொதுமக்களின் அபிலாசைகளைக் கேட்பது காலத்தையும், நிதியையும் வீணடிக்கும் செயற்பாடாகும் என்று மின்பாவனையாளர் சங்கத்தின் தலைவர் எம்.டி.ஆர். அதுல தெரிவித்துள்ளார். கொழும்பில் உள்ள மின்பாவனையாளர் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர மேலும் தெரிவித்துள்ளதாவது-

மின்கட்டணம் குறைக்கப்படும் என்ற தீர்மானத்தைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிக்காது, மாறாக மின்கட்டணத்தை அதிகரிக்க அனுமதி என்ற அறிவிப்பையே வெளியிடும். சர்வதேச நாணயநிதியத்தை மகிழ்வித்து, ஐந்தாம் தவணைத் தொகையை பெற்றுக்கொள்வதற்காக மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் நோக்கங்களுக்கு அமைவாகவே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு செயற்படுகின்றது. அதனால் மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் மக்களின் அபிலாசைகளைக் கோருவது பயனற்றது என்றார். (எ-க-இ)

## ஊழல் இல்லாதொழிய வாய்ப்புக்கள் இல்லை

### அரசை சாடுகிறார் கம்மன்பில

கொழும்பு,ஒக்.7

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் முறையற்றமுறையில் நியமிக்கப்பட்டுள்ளபோது, நாட்டில் எவ்வாறு ஊழல் இல்லாதொழியும்? முறையான விசாரணைகள் எவ்வாறு முன்னெடுக்கப்படும்? என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக ரங்க திஸாநாயக்க நியமிக்கப்பட்டமை தொடர்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மேல் நீதிமன்றத்தின் நீதிபதி ரங்க திஸாநாயக்கவை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நியமித்ததை சவாலுக்குட்படுத்தி, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. ஆனால் இந்த மனு அண்மையில் மனுதாரர்களால் மீளப்பெறப்பட்டுள்ளது. உறுதியான காரணிகள் உள்ள பின்னணியில் மனு மீறப்பெறப்பட்டமை சந்தேகத்துக்குரியது-என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் 4,500க்கும் அதிக முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக்.7

**இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், கையூட்டல் சம்பவங்கள் தொடர்பாக 4 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இந்த முறைப்பாடுகளுக்கு அமைய 85 தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. நீதி அமைச்சுடன் தொடர்புடைய நிறுவனங்களைச் சேர்ந்த 9 பேரும், மூன்று கிராம உத்தியோகத்தர்களும், இரண்டு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் நீதிமன்றங்களில் 61 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ஏ-25-இ)

## அதிகவிலைக்கு அரிசி விற்ற 135 பேர் மீது நடவடிக்கை

கொழும்பு, ஒக்.7

அதிக விலைக்கு அரிசி விற்பனைசெய்த நூறுக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நாடு முழுவதும் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 135 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ஏ-25-இ)

## பதவி நீக்கப்பட்டார் பத்மசிறி லியனகே!

கொழும்பு, ஒக். 7

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பத்மசிறி லியனகே பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தான நிலத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் கோப் குழுவில் வெளிக்கொணரப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகமாக தற்போது தினேகா ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார் என்று காணி மற்றும் நீர்ப்பாசனப் பிரதியமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார். (ஏ-25,இ)



## 2 கிலோவுக்கு அதிக ஹெரோய்னுடன் இருவர் கைது

கொழும்பு, ஒக்.7

பிலியந்தல போகுந்தரப் பிரதேசத்தில் இரண்டு கிலோவுக்கும் அதிகளவான ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர்நடத்தியசுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல்காரருமான "களுபோவில அவிஷ்க" என்பவரின் முக்கியமான உதவியாளரான "களுபோவில சுட்டி" மற்றும் அவரது மூத்த சகோதரருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

24 மற்றும் 25 வயதுடைய சந்தேகநபர்கள் பிலியந்தலப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

## சுயாதீனத்தை இழந்தது பொலிஸ் ஆணைக்குழு

### தயாசிறி குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.7

முழுமையான அரசியல் தலையீட்டால், பொலிஸ் ஆணைக்குழு சுயாதீனத்தன்மையை இழந்துள்ளது. ஜே.வி.பி. செயற்பாட்டாளரான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தீர்மானத்துக்கமையவே, பொலிஸ்மா அதிபர் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு சுயாதீனமாக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக, பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இடமாற்றம், நியமனங்கள் உள்ளிட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஆனால் தற்போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் நியமனங்களில் அரசியல் தலையீடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் சுயாதீனத்தன்மையை பொலிஸ் ஆணைக்குழு கைவிட்டுள்ளது. அரசாங்கத்தின் அழுத்தத்தின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிகள் நாளுக்கு நாள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். பொருத்தமற்றவர்கள் பதவிகளில் நியமிக்கப்படுகின்றனர். நீண்ட நேரம் நிற்கமுடியாதவர்கள் போக்குவரத்துப் பிரிவில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்-என்றார். (ஏ-க-இ)






## சின்னத்தொகையும் கேஸும்

**பா**த்திரமறிஞ்சு பிச்சையிடு எண்டு சொல்லுவினம். இந்தக் கலிகாலத்தில உதவி கேக்கேக்கையும் ஆரிட்ட உதவிவாங்கிறம் எண்டதில கவனமா இருக்கோணும் போல. இல்லாட்டி, உதவி செய்யிறம் எண்டிட்டு உபத்திரம் செய்துபோட்டுப் போடுவினம். கிட்டடியில கிளிநொச்சியில ஒரு சம்பவம். ஒரு வயதான அம்மா, கரண்ட்பில் கட்டவெண்டு வங்கிக்கு போயிருக்கிறா. இப்ப வங்கியளில உள்ளுக்க இருக்கிற கவுண்டரில உந்தக் கரண்ட்பில் காசு கட்ட ஏலாது. வெளியில இருக்கிற மிஷினிலதான் கரண்ட்பில் காசைக் கட்டோணும். அந்த அம்மாவுக்கும் கவுண்டரில இருந்தவை 'வெளியில இருக்கிற மிஷினில கட்டுங்கோ' எண்டு கைகாட்டி இருக்கினம். ஆனால் அந்த அம்மாவுக்கு மிஷினில எப்பிடிக் காசு போடுறதெண்டு தெரியேலை. அதுக்காக காசைக் கட்டாமலும் போகேலாது. இண்டைக்கு காசைக் கட்டாட்டி நாளைக்கே வந்து கரண்டைக் கட் பண்ணினால், பிறகு அதுக்காக ஆத்துலைஞ்சு அலையேலாதே.

என்ன செய்யாலாம் எண்டு அந்த அம்மா யோசிச்சுக் கொண்டிருக்கேக்க, ரிப்ரொப்பா வெளிக்கிட்டபடி ஒரு பெடியன் அந்த மிஷினில காசுபோட வந்திருக்கிறான். அந்த அம்மாவும் அவனிட்டப் போய், ' தம்பி, எனக்கும் ஒருக்கா கரண்ட்பில் கட்டி விடுறியோப்பு?' எண்டு கேட்டிருக்கா, அவனும் ஓமெண்டிட்டான்.இவா ஆறாயிரத்து ஐநூறு ரூபா காசைக்குடுத்திட்டு வெளியில நிக்க, அந்தப் பெடியன் திரும்பக் கண்ணாடிப் பெட்டிக்குள்ள போய் அங்க இருக்கிற மிஷினுக்குள்ள காசைப் போட்டிட்டு, காசு கட்டினதுக்கான ரிசீற்றையும் குடுத்திட்டுப் போட்டான். வீட்டை போய் தன்ர மகனிட்ட அந்த ரிசீற்றைக் குடுத்துப் பார்த்த பிறகுதான், அந்தக் காசு தங்கட கரண்ட்பில்லுக்குக் கட்டுப்படாமல் வேற ஒரு ரிசீற்றை அந்தப் பெடியன் தன்னட்டைத் தந்து ஏமாத்திப்போட்டான் எண்டு அவைக்குத் தெரியவந்திருக்குது.

உடனேயே அந்த வங்கிக்குப் போய் இப்பிடி நடந்திருக்கு எண்டு சொல்லியிருக்கிறா. அவையும் பொலிஸில முறைப்பாடு செய்யாமல் நாங்கள் நடவடிக்கை எடுக்கேலாது எண்டு சொல்லியிருக்கினம். உடன அவா பொலிஸுக்குப் போனால் 'இப்பிடி ஆறாயிரத்து ஐநூறு ரூபா மாதிரிச் சின்னத் தொகைக்கெல்லாம் கேஸ் எடுக்கேலாது' எண்டு கலைச்சு விட்டிட்டினமாம். அந்த அம்மாவுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. பிறகு ஒருமாதிரி அவாக்குத் தெரிஞ்ச ஒரு ஊடகவியலாளர் மூலமா அந்த வங்கியின்ர மனேச்சருக்கு பிரச்சினையைச் சொன்னபிறகு, அவை சிசிரிவி கமெராப் பதிவுகளையும், அந்தநேரம் எந்த எக்கவுண்டுக்கு காசு போடுப்பட்டது எண்டதையும் வைச்சு மோசடி செய்தவரைக் கண்டுபிடிச்சு பொலிஸுக்கு அறிவிச்சிருக்கினம். அதுக்குப் பிறகுதான் பொலிஸ் உந்தக் கேஸை எடுத்து, அந்தப் பெடியனை பிடிச்சிருக்கினம். 'எனக்குக் காசை வாங்கித் தந்தால் காணும். கேஸ் போடாதையுங்கோ' எண்டு அங்கையும் பெருந்தன்மையா, தன்னை ஏமாத்தினவன மன்னிச்சு விட்டிருக்கா அந்த அம்மா. இத்தனைக்கும் அந்தப் பெடியன் ஒரு கொம்பனியில வேலை செய்யிறவர். அப்பிடி இருந்தும் சுருட்டல் புத்தி போகேலை. அதைவிட ஆறாயிரத்து ஐநூறு ரூபா மோசடிக்கெல்லாம் கேஸ் எடுக்கமுடியாது எண்டு சொன்ன பொலிஸ்காரர் இருக்கும் வரை இப்பிடியான மோசடியள் நடக்கத்தானே செய்யும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்
(ராசிபலன்)

**மேடம்:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறுதாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த தகவல் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மாலையில் எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு. மாலையில் உறவினர்கள்மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வ வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியாகி முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்லதகவல் இன்று வந்துசேரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள்வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். சகோதரர்களுக்காக செலவுசெய்ய நேரிடும்.

**தனுசு:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**கும்பம்:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், கவனமாக இருக்கவும். நீங்கள் கொடுத்த கடன்தொகை திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம்தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.



# திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.7

**தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோதமான விகாரையை அகற்றக்கோரி பௌர்ணமி தினமான நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை அகற்றக்கோரி மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. (எ-25-இ)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்குப் போட்டிகள்

யாழ்ப்பாணம் ஒக்.7

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின்கீழ் இயங்கும் மானிப்பாய், ஆனைக்கோட்டை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய பொதுநூலகங்களில் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய வாசிப்பு மாதப்போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. இந்தப்போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு தரம் 1 முதல் 3, தரம் 4 முதல் 5, தரம் 6 முதல் 8, தரம் 9 முதல் 11, தரம் 12 முதல்13, வரையான பகுதிகளில் வாசிப்பு, திருக்குறள் மனனப் போட்டி, கட்டுரை, பேச்சு, கவிதை, சித்திரம் வரைதல், பொது அறிவு, துண்டுப்பிரசுர வெளியீடு, புதிய நூல்களின் கண்காட்சி மற்றும் சிறார்களுக்கான பொழுதுபோக்கு நிகழ்வு போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. முன்பள்ளி மாணவர்களுக்கு கதைகூறல், நிறம் தீட்டுதல், எண்கள் மற்றும் எழுத்துகளை இணைத்தல் போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளன. மாணவர்கள் அவற்றில் கலந்துகொண்டு தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தவேண்டும் என்று மானிப்பாய் பிரதேசசபையின் நூலகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-25)

## ரயிலுடன் மோதி இருவர் உயிரிழப்பு

மன்னார், ஒக்.7

ரயிலுடன் மோதி இருவேறு சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்புப் பகுதியில் தலைமன்னாரிலிருந்து கொழும்புக்கோட்டை நோக்கிச் செல்லும் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. கண்டியில் கடுகண்ணாவைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடுகண்ணாவை ரயில் நிலையத்துக்கு அருகில் கண்டியிலிருந்து பொல்கஹவெல நோக்கிச் செல்லும் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் அக்குரஸ்ஸ, கனத்தொட்டைப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-25-இ)




## உளநல நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ். வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் உளநல நாள் நிகழ்வு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் தலைமையில் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ்.போதனா மருத்துவமனை உளநல மருத்துவர் எஸ். சிவகரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவன், மாகாணக் கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.ஜெயகரன், யாழ்.கோட்டக்கல்வி அலுவலர் கே.லங்கா பிரதீபன், மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் சு.இக்னேசியஸ்க்ளனி, யாழ். போதனா மருத்துவமனை உளவளத் துணையாளர் ந.நவராஜ் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.வலயக்கல்வி அலுவலக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.சிறிமுருகதாஸ்காந்தன், ஆங்கில ஆசிரிய ஆலோசகர் டபிள்யூ. நவராஜ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-25)

## பாரவூர்தி மோதி விபத்து; இரு முதியவர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஒக்.7

பாரவூர்தி மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு முதியவர்கள் படுகாயமடைந்தனர். இந்த விபத்து பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனத்தை பின்னால் பயணித்த பாரவூர்தி முந்திச் சென்று, பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதியுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு முதியவர்களும் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# விருதும் பொறுப்பும்

சர்வதேச ரீதியில் 2025ஆம் ஆண்டுக்கான சிறந்த தேர்தல்கள் ஆணைக்குழுவாக இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவாகியுள்ளது. பொட்ஸ்வானாவின், காபோரானில் நடைபெற்ற 2025 சர்வதேச தேர்தல் விருது வழங்கும் நிகழ்விலேயே, இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. சர்வதேசரீதியில் இலங்கையின் தேர்தல் ஆணைக்குழு பெற்றுள்ள முதல் விருது இது. உலகம் முழுவதும் ஜனநாயகத்தின் அடித்தளமாகத் தேர்தல் அமைப்புகளே திகழ்கின்றன. அவற்றின் நம்பகத்தன்மை, திறமையான செயற்றிறன், மக்கள் நம்பிக்கையை நிலைநிறுத்தும் நேர்மை ஆகியவை அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள். இத்தகைய அடிப்படைகளின் பேரில், இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு 2025ஆம் ஆண்டின் 'சிறந்தத் தேர்தல்கள் ஆணைக்குழு' என்ற சர்வதேச விருது வழங்கப்பட்டிருப்பது சிறப்பானதொரு விடயமே.

குறுகியகால இடைவெளிக்குள் ஜனாதிபதித்தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித்தேர்தல் என மூன்று தேர்தல்களை சுமுகமாகவும், வினைத்திறனாகவும் நடத்திமுடித்து, இலங்கையில் தளம்பல் நிலையில் இருந்த ஜனநாயகத்தை உறுதியான நிலைக்குக் கொண்டுவந்த தேர்தல் ஆணைக்குழுவின் திறனும் திட்டமிடலும் பாராட்டத்தக்கவை. எந்தவொரு நாட்டிலும் இத்தகைய பெரிய அளவிலான தேர்தல்களை மிகக்குறுகிய கால இடைவெளிக்குள், சீராகவும், குறைகள் இல்லாமலும் நடத்துவதென்பது மிகப்பெரிய சவாலே. அந்தச் சவாலை இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு வெற்றிகரமாகச் சமாளித்துள்ளது. இதுவே இந்தச் சர்வதேச அங்கீகாரத்துக்கான காரணமாகவும் அமைந்துள்ளது.

ஆனால், இந்த விருதை இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு பெற்றுக்கொண்ட தருணத்தில், ஒரு குறையும்கூடவே இருக்கின்றது. மாகாணசபைத் தேர்தல்கள் மிக நீண்டகாலமாக நடைபெறாமல் இழுபட்டுச்செல்வதே அந்தக் குறை. எல்லை நிர்ணயம், தேர்தல் முறை மாற்றம் போன்ற காரணங்களால் பல ஆண்டுகளாக மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுவருகின்றது. இது ஜனநாயகத்தின் உயிர்மையைக் குறைக்கும் ஒன்றாகும். இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவின் தொழில்நுட்பத்திறனும் நேர்மையும் உலகளவில் பாராட்டப்படுவதில் ஐயமில்லை. எனினும், ஜனநாயகத்தின் முழுமையான வடிவம் அனைத்து நிலைகளிலும் தேர்தல் நடத்தப்பட்டால்தான் வெளிப்படும். மாகாணசபைத் தேர்தல் என்பது ஒரு சட்டபூர்வப் பொறுப்பு மட்டுமல்ல, மக்கள் பிரதிநிதித்துவத்தின் அடிப்படை உரிமையும் ஆகும். எனவே, அந்தத் தேர்தலை நடத்தும் வரை இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவின் சாதனை பூரணமடைவதாகக் கருதமுடியாது.

ஆனால் , மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் முற்றுமுழுதாக தேர்தல் ஆணைக்குழுவில் மட்டும் பழிபோட முடியாது. ஆட்சிபீடத்தில் இருப்பவர்களும் அக்கறைகாட்ட வேண்டும். ஆனால் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தின் மீதுள்ள காழ்ப்புணர்வினாலேயே திசைகாட்டி அரசாங்கமும், முன்னைய அரசாங்கங்கள் போன்று மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில் அக்கறையற்று இருக்கின்றது. அத்தோடு கடைசியாக நடைபெற்ற உள்ளூராட்சித்தேர்தலில் திசைகாட்டி அரசாங்கம் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. அதன் வாக்குவங்கி சரியத்தொடங்கியிருக்கிறது. இந்தநிலையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தினால், அது அரசாங்கத்தின் செல்வாக்கை குறைத்துவிடும் என்று தேசிய மக்கள் சக்தியினர் நம்புகின்றனர். எனவே அவர்களும் மாகாணசபைத் தேர்தலை எவ்வளவுக்கு நடத்தாமல் இழுத்தடிக்கமுடியுமோ அவ்வளவுக்கு இழுத்தடித்துவருகின்றனர்.


சர்வதேச விருது ஒன்று ஒரு அமைப்பின் திறமையை உலகம் முன் வெளிப்படுத்தலாம்; ஆனால், அதைவிட முக்கியமானது மக்கள் முன் நம்பிக்கை நிலைநிறுத்தும் பொறுப்பு. அந்த நம்பிக்கையை முழுமையாக்கும் பாதை மாகாணசபைத் தேர்தலின் வழியேதான் செல்லும். அதனை நிறைவேற்றிய நாளில்தான் இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவின் சர்வதேச அங்கீகாரம் உண்மையான அர்த்தத்தில் பூரணமடையும். எனவே அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து மாகாணசபைத் தேர்தலை நடத்தி, இந்த விருதுக்கு நூறு சதவீதம் உரித்துடையவர்கள் என்பதைத் தேர்தல் ஆணைக்குழு நிரூபிக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உண்மையைக் கூறும்போது அது யாரைத் தாக்குகிறதென்று பார்க்காதே.

– மகாத்மா காந்தி –



# பிறப்பு வீதம் வீழ்ச்சி இறப்பு வீதம் உயர்வு

**கொழும்பு, ஒக்.7**

**இலங்கையில் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும், இறப்பு வீதம் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024ஆம் ஆண்டு பிறப்பு வீதம் 80 ஆயிரத்து 945 ஆல் குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

2024ஆம் ஆண்டு அதிக பிறப்புகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன என்றும், மிகக்குறைந் பிறப்புகள் முல்லைத்தீவில் பதிவாகியுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 3 இலட்சத்து ஆயிரத்து 706 ஆகக் காணப்பட்ட நிலையில், 2024ஆம் ஆண்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 20 ஆயிரத்து 761 ஆகப்பதிவாகியுள்ளது. 2020ஆம் ஆண்டு இறப்புகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 371 ஆகவும், 2024ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 194 ஆகவும் பதிவாகியுள்ளது. (எ-இ)



# தேங்காய் விலை உயர்வு

கொழும்பு, ஒக்.7

வாராந்தத் தேங்காய் ஏல விற்பனையில் இலங்கையின் சராசரித் தேங்காய் விலை 6.8 சதவீதம் உயர்ந்துள்ளது என்று தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைத் தரவுகள் தெரிவிக்கின்றன. ஆயிரம் தேங்காய்களின் சராசரி விலை ஒருஇலட்சத்து 38 ஆயிரத்து 582 ரூபாவாகக் காணப்படுகின்றது. ஆயினும் வாராந்தத் தேங்காய் ஏல விற்பனையில், பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச அல்லது குறைந்தபட்ச விலை குறிப்பிடப்படவில்லை. அதே வேளை, உள்நாட்டுச் சந்தையில் பெரிய தேங்காய் ஒன்றின் மொத்த விலை 180 முதல் 190 ரூபாவாகவும், சிறிய தேங்காய் ஒன்றின் மொத்த விலை 150 முதல் 170 ரூபாவாகவும் காணப்படுகின்றது. (எ-25-இ)

# மாயமாக மறைந்த 32 புறாக்கள்


கொழும்பு, ஒக்.7

தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் இருந்த 32 புறாக்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தப் புறாக்கள் கடந்த ஜூலை மாதம் இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாகப் படகுமூலம் நாட்டுக்குக்கொண்டுவரப்பட்ட போது பறிமுதல் செய்யப்பட்டிருந்தன. இவை அண்மையில் தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில், கூடு உடைக்கப்பட்டு அவை திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

# சீரற்ற காலநிலையால் 30,000 மின்தடைகள்!

மழையுடனான வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் சுமார் 30 ஆயிரம் மின் விநியோகத்தடைகள் ஏற்பட்டுள்ளன என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மின் விநியோகத்தடையை வழமைக்குக் கொண்டுவருவது தாமதமடைந்துள்ளது என்று தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க தெரிவித்தார். (எ-25-இ)



# புற்றுநோய்க்கான மருந்து இலங்கையில் தயாரிப்பு!

கொழும்பு, ஒக்.7

புற்றுநோய்ச் செல்களை அழிக்கும் ஊட்டச்சத்து மருந்து இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிர்வேதியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப நிறுவனத்தின் பேராசிரியர் சமீரா ஆர்.சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த மருந்துமூலம் 2027ஆம் ஆண்டுக்குள் இலங்கை சுமார் 2 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானத்தை ஈட்டமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊட்டச்சத்து மருந்து மிகவும் நவீன அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி ஐந்து பாரம்பரிய மருத்துவத் தாவரங்களின் கலவையைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

நாளை
புதன்கிழமை - புரட்டாதி 22
08.10.2025
சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த அரசாங்கங்களைவிட சிறந்தது தற்போதைய அரசு



## சரத் பொன்சேகா புகழாரம்

**கொழும்பு, ஒக்.7**
**கடந்த கால அரசாங்கங்களைவிடவும் தற்போதைய அரசாங்கம் ஆயிரம் மடங்கு சிறந்தது என்று முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
ஊழல் செய்பவர்களைப் பாதுகாக்காது தற்போதைய அரசாங்கம் முதுகெலும்புடன் இருக்கின்றது. சிறிய குறைபாடுகள் இருந்தாலும் இந்த அரசாங்கம் முந்தைய அரசாங்கங்களைவிடவும் ஆயிரம் மடங்கு சிறந்தது என்பதை நான் முழுமனதுடன் கூறுகின்றேன்.
ராஜபக்சக்கள் ஊழல் வலையமைப்பை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு சென்று, தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அதனால் நாட்டில் ஊழல் எல்லைகளை உடைத்துச் செயற்பட்டது.
ஒரு திருடன் கடந்த காலத்தில் ஏதேனும் குற்றம் செய்திருந்தால், அவனிடம் பணம் இருந்தால், அவனிடம் குண்டர் சக்தி இருந்தால், பின்கதவு வழியாக அதிலிருந்து தப்பிக்கமுடியும். எந்தவொரு மோசடியிலிருந்தும் அவன் தப்பிக்கமுடியும். ஆனால் மோசடி செய்பவர்கள் பின் கதவு வழியாகத் தப்பிக்கும் வாய்ப்பை இந்த அரசாங்கம் குறைந்தபட்சம் தடுத்துநிறுத்தியுள்ளது. சட்டத்தை செயற்படுத்தவும் தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கின்றது.
இது நூறு வீதம் வெற்றிபெறவில்லை என்றாலும், முந்தைய அரசாங்கங்களைவிட ஆயிரம் மடங்கு சிறந்தது என்று நான் அச்சமின்றிச் சொல்லமுடியும்-என்றார். (எ-இ)



# தனிக்கட்சி முறைமையில் ஆட்சியை நடத்த முயற்சி

## தொலவத்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.7
மறைமுகமாக கட்சிமுறைமையில் ஆட்சியை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
தற்போது மாகாணசபைகளின் அதிகாரம் முற்றுமுழுதாக அதிகாரிகள் வசமாகியுள்ளது. அவர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகவுள்ளனர். மறுபுறம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் காணப்படுகிறது.
இவை அனைத்துக்கும் மேலாக நிறைவேற்றதிகாரமும் காணப்படுகின்றது. இவ்வாறு அதியுச்ச அதிகாரங்களைத் தம்வசம் வைத்துக்கொண்டும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அவை போதாது என்றும் ஜனாதிபதி கூறுகின்றார். தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனிக்கட்சி ஆட்சிமுறைமை வேண்டும் என்கின்றனர். ஜனநாயத்தை அழித்து ஒரு கட்சி ஆட்சிமுறைக்கு ஒருபோதும் இடமளியோம்- என்றார். (க-இ)



# அரசாங்கத்துக்கு சவாலாக மாறியுள்ள நாமல்

கொழும்பு, ஒக்.7
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச பெரும் சவாலாக மாறியுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் செயற்பாட்டுத் தலைவரான அவர், குருநாகல் மாவட்ட அமைப்பாளர்களை நியமிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
நாமல் ராஜபக்ச அடுத்த ஜனாதிபதியாக வருவார் என்று அனைவரும் கூறுகின்றனர். அதனால் நாமல் ராஜபக்சவுக்கு எதிராக அவதூறுகள் பரப்பப்படுகின்றன. அரசாங்கத் தரப்பினர் பயத்தில் இதையெல்லாம் செய்கிறார்கள். அந்தப் பயம் நல்லது. அந்தப் பயத்தைத் தக்கவைக்கவேண்டும். அதுவே நமக்கு இப்போது தேவையாக இருக்கின்றது. மொட்டுக் கட்சி அடுத்ததாக ஆட்சியைப் பிடிக்கப்போகின்றது என்பது அனைவருக்கும் தெரியும்-என்றார். (எ-இ)

# நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு ஊடாக ஜனாதிபதியின் செலவுக்கு அதிக நிதி

## ஐக்கிய மக்கள் சக்தி விமர்சனம்

கொழும்பு, ஒக்.7
2026ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு ஊடாக, ஜனாதிபதிக்கான செலவுகளுக்கு 11.37 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவைவிட 72 வீத அதிகரிப்பாகும். இதற்கான காரணத்தை ஜனாதிபதியும், அரசாங்கமும் மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.
குருநாகலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
2024ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவுகள் 6.6 பில்லியன் ரூபாவாகும். இது 2025ஆம் ஆண்டு அநுரகுமார திஸாநாயக்கவின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் 2.9 பில்லியன் வரை குறைக்கப்பட்டது. ஆனால் தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2026ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவில் 11.37 பில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு தமக்குக் குறிப்பிட்டளவு நிதித் தேவை ஏற்படும் என்பதை இப்போதாவது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க புரிந்துகொண்டிருப்பார் என நம்புகின்றோம். கடந்த காலங்களில் ஜனாதிபதிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டபோது, அவற்றைக் கடுமையாக விமர்சித்த ஜே.வி.பி. இப்போதாவது யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்-என்றார். (க-இ)



# பாலியல் சுதந்திரத்தை வழங்கி சிறுவர்களைச் சிதைக்கும் அரசு

## காவிந்த எம்.பி. குற்றச்சாட்டு

16 வயது பூர்த்தியான சிறுவர்கள் பாலியல் உறவில் ஈடுபட சுதந்திரம் வழங்கி, நாட்டின் சொத்துகளான சிறுவர்களைத் தவறாக வழிநடத்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயல்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.
ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க 16 வயது பூர்த்தியடைந்த சிறுவர்கள் பாலியல் உறவில் ஈடுபடமுடியும் என்று நாடாளுமன்றில் கூறுகின்றார். 16 வயதுடையோருக்கு இதுபோன்ற சுதந்திரம் வழங்கப்பட்டால், நாட்டின் ஒழுக்கம் என்னவாகும்? திருமணத்துக்கு முன்னதான பாலியல் உறவுகளால் எயிட்ஸ் உள்ளிட்ட நோய்கள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை 17 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. சுமார் 20 வயதுடைய இளைஞர்களே அதிகம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறிருக்க தன்பாலீர்ப்பினரை அடிப்படையாகக்கொண்ட சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முயற்சிகளையும் முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா போன்ற வல்லரசு நாட்டில்கூட இதை அனுமதிக்க விரும்பாத போது, எம்மைப்போன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடு எவ்வாறு இதை அங்கீகரிக்கமுடியும்? இளைஞர்களின் வாக்குகளை நோக்கமாகக் கொண்டே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் ஆழமாகச் சிந்தித்துத் தீர்மானங்களை எடுக்கவேண்டும்-என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## நெளுக்குளம் மாட்டிறைச்சிக் கடை, கோழியிறைச்சிக் கடை, மீன் கடை,சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக் கடை, கோழியிறைச்சிக் கடை, மீன் கடை, கடை, கோமரசங்குளம் மாட்டிறைச்சிக் கடை, குளுமாட்டுச்சந்தி கடைத்தொகுதி, ஓமந்தை உணவகம், நீர் சுத்திகரிப்பு நிலையம் நடாத்துவதற்கான கேள்வி அறிவித்தல் -2026

1. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்த நெளுக்குளம் மாட்டிறைச்சிக் கடை. கோழியிறைச்சிக் கடை. மீன் கடை. சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக் கடை. கோழியிறைச்சிக் கடை. மீன் கடை. கடை. கோமரசங்குளம் மாட்டிறைச்சிக் கடை. குளுமாட்டுச்சந்தி கடைத்தொகுதி. ஓமந்தை உணவகம். நீர் சுத்திகரிப்பு நிலையம் போன்றவற்றை 2026ஆம் ஆண்டு தை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2025.10.07 தொடக்கம் 2025.10.21 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2. கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2025.10.21 ஆம் திகதி பிற்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி "தலைவர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம். வவுனியா" என்ற முகவரிக்கும், ஒரு பிரதி பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். பூங்கா வீதி. வவுனியா" என்ற முகவரிக்கும். பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. 2025.10.21ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும் போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.
4. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாகவும் வவுனியா மாவட்டத்தினை சேர்ந்தவராகவும் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருக்க வேண்டும். கறுப்பு நிரலில் உள்ளவருக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.
5. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் என்பவற்றுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
6. குத்தகைக்காலம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினை கொண்டதாக இருக்கும்.
7. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து சபையினால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் தங்களால் கோரப்படும் கேள்வித்தொகையில் 1/3 பகுதியையோ அன்றி முழுவதையுமோ காரியாலயத்தில் செலுத்தி கடைக்கான உடன்படிக்கையை பூர்த்தி செய்தல் வேண்டும்.
8. கேள்வித்தொகையின் மிகுதி 2/3 பகுதியினை 8 சம தவணைக்கட்டணங்களாக செலுத்துதல் வேண்டும். மாதாந்த கட்டுப்பணங்களை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக குத்தகைப்பணம் முழுவதும் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் விதிக்கப்படும் VAT, NBT என்பனவும் செலுத்தப்படல் வேண்டும். இக்கால அவகாசத்திற்குள் குத்தகைப்பணத்தை செலுத்தத் தவறும் கேள்விதாரரின் வைப்புப்பணம் பறிமுதல் செய்வதுடன். கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து கேள்வியினை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு கேள்வி வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்களது பெயர் கேள்விகோரும் தகுதியுடையவர்களின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் கறுப்புப் பட்டியலிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.
9. ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கான வாடகைப் பணத்தினை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்வி கோரும் போது சித்தி பெறும் குத்தகைப்பணத்தினை குறித்த கால எல்லைக்குள் கட்டுவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.
11. கேள்வி அறிவித்தலுக்கும். நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது. கேள்விப்படிவங்களைப் பெற முன்பும் அதற்குப் பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமானது.
12. இறைச்சி. மீன்கடைகளில் வழங்கப்படும் இறைச்சிகள். மீன்கள் சுத்தமாகவும். நோயற்ற இறைச்சியாகவும் நிறை சரியாகவும். சபையினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விலை விகிதாசாரப்படியே பொது மக்களுக்கு விற்பனை செய்தல் வேண்டும். நடமாடும் மற்றும் கோழி வியாபாரிகள் அக் கடையிலிருந்து சுற்றுவட்டாரம் 500மீற்றர் தூரத்திற்குள் மீன் மற்றும் கோழி வியாபாரத்தில் ஈடுபடமுடியாது.
13. சுகாதாரப்பரிசோதகரால் அனுமதிக்கப்பட்ட இறைச்சி. மீனை மட்டுமே கடையில் வைத்து விற்பனை செய்தல் வேண்டும். இவை தவிர வேறு இறைச்சியையோ அல்லது உணவுக்கு ஒவ்வாத இறைச்சியையோ. மீனையோ விற்பனை செய்தால் அவ் இறைச்சியை. மீனை பறிமுதல் செய்வதுடன் ஒப்பந்தமும் இரத்து செய்யப்படும்.
14. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் சித்திபெற்ற மாதாந்த கட்டுப்பணத்தினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலுமின்றி குத்தகை இரத்துச்செய்யப்பட்டு ஒப்பந்த பிணைப்பணத்தினை சபையின் நிதியத்திற்கு மாற்றும் அதிகாரம் சபைக்கு அல்லது தலைவர் மற்றும் செயலாளருக்கு உண்டு.
15. இங்கு அறிவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்திற்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்து மூலம் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
16. யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ. அல்லது கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கும் எனக்கும் உரிமையுண்டு.
17. மீன் விற்பனையைப் பொறுத்தமட்டில் மீன்கள் தரமானதாகவும் நல்லதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்தல் வேண்டும்.
18. உரிய நேரத்தில் கேள்விப்படிவங்களை சமர்ப்பிக்காத கேள்விதாரின் கேள்விப்பிணைப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.
19. குத்தகைக்கு எடுத்தவர் உபகுத்தகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும்.
20. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
21. மேலே சொல்லப்பட்ட கேள்வி நிபந்தனைகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டே கேள்விகள் அனுப்புதல் வேண்டும்.
22. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கடை விபரம் | 2026 கேள்வி கோரவேண்டிய தொகை | மாதவாடகை | கேள்விவைப்பு | மீளளிக்கப்படாத கேள்வி படிவ கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 1,032,235.45 | 2,000.00 | 25,000.00 | 2,000.00 |
| 2 | நெளுக்குளம் கோழிறைச்சிக்கடை | 343,298.18 | 2,000.00 | 25,000.00 | 2,000.00 |
| 3 | நெளுக்குளம் மீன் கடை | | 6,050.00 | 25,000.00 | 2,000.00 |
| 4 | சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 796,440.68 | 1,500.00 | 25,000.00 | 2,000.00 |
| 5 | சாளம்பைக்குளம் கோழியிறைச்சிக்கடை | | 4,831.53 | 36,000.00 | 2,000.00 |
| 6 | சாளம்பைக்குளம் மீன்கடை | 180,256.33 | 1,500.00 | 25,000.00 | 2,000.00 |
| 7 | சாளம்பைக்குளம் கடை | | 3,726.80 | 36,000.00 | 2,000.00 |
| 8 | கோமரசங்குளம் மாட்டிறைச்சிக்கடை | 142,655.83 | 1,500.00 | 25,000.00 | 2,000.00 |
| 9 | குளுமாட்டுச்சந்தி மீன் கடை 01 (வலது) | | 2,528.90 | 25,000.00 | 2,000.00 |
| 10 | குளுமாட்டுச்சந்தி மீன் கடை 01 (இடது) | | 2,528.90 | 25,000.00 | 2,000.00 |
| 11 | குளுமாட்டுச்சந்தி மீன் கடை 02 (வலது) | | 2,462.35 | 25,000.00 | 2,000.00 |
| 12 | குளுமாட்டுச்சந்தி மீன் கடை 02 (இடது) | | 2,462.35 | 25,000.00 | 2,000.00 |
| 13 | குளுமாட்டுச்சந்தி மீன் கடை 03 (வலது) | | 2,395.80 | 25,000.00 | 2,000.00 |
| 14 | குளுமாட்டுச்சந்தி மீன் கடை 03 (இடது) | | 2,395.80 | 25,000.00 | 2,000.00 |
| 15 | குளுமாட்டுச்சந்தி மீன் கடை 04 (வலது) | | 2,329.25 | 25,000.00 | 2,000.00 |
| 16 | குளுமாட்டுச்சந்தி மீன் கடை 04 (இடது) | | 2,329.25 | 25,000.00 | 2,000.00 |
| 17 | ஓமந்தை நீர்சுத்திகரிப்பு நிலையம் (பெண் முயற்சியாளர்கள் மட்டும்) | | 3,630.00 | 25,000.00 | 2,000.00 |
| 18 | ஓமந்தை உணவகம் (பெண் முயற்சியாளர்கள் மட்டும்) | | 5,845.75 | 25,000.00 | 2,000.00 |

**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,** **2025-10-07**



# நேபாளத்தில் வெள்ளம் 47 பேர் உயிரிழப்பு

காத்மண்டு, ஒக்.7
நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக 47 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் அங்கு போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. வெள்ளம் காரணமாக பலர் காணாமற்போயுள்ளனர் என்றும், காணாமற் போயுள்ளவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. அதேவேளை, இன்று வரை அங்கு மழையுடனான வானிலை நீடிக்கும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (எ-இ)

# எவரெஸ்ட் பனிப்புயலில் சிக்கியுள்ள ஆயிரம் பேர்



காத்மண்டு, ஒக்.7
உலகின் மிக உயரமான மலைப்பகுதியான எவரெஸ்ட் சிகரத்தின் கிழக்கே அமைந்துள்ள திபெத் பிராந்தியத்தில் கடும் பனிப்புயல் நிலவுவதால், மலையேற்ற வீரர்கள் உட்பட சுமார் ஆயிரம்பேர் மலைப்பகுதியில் சிக்கியுள்ளனர்.
மலைச்சரிவுகளில் தற்காலிக முகாம்கள் அமைத்து மலையேறும் பணியில் ஈடுபட்டிருந்த வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சிக்கியுள்ளனர் என்று கூறப்படு கின்றது. பனிப்புயலில் சிக்கியுள்ள இந்த ஆயிரம் பேரையும் மீட்கும் பணியில் சீன மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

**மாபிள் வேலை**
தரமான முறையில் மாபிள் பதித்துக் கொடுக்கப்படும்.
1 சதுர அடி - 75 ரூபா
தொடர்பு: 077 940 7993

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் 39ஆவது வருட பொதுக் கூட்டம்

**இடம் : தென்மராட்சி கலாசார மண்டபம்**
**சிவன் கோயிலடி, சாவகச்சேரி.**
**காலம் : 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : 10.00 மணி**

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும் நடைபெறவுள்ளது. சகல அங்கத்தவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
பிரேரணைகளை 22.10.2025 ஆம் திகதிக்கு முன்னர் மன்றச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்கவும்.

**செயலாளர்**
**சாவகச்சேரி கைத்தொழில்**
**வணிகர் மன்றம்.**

(CR/46439) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி அரச முதியோர் இல்லத்தில் வாழ்ந்து 2024.10.01இல் இருந்து 2025.09.30 வரையான காலப்பகுதியில் இயற்கையெய்திய முதியவர்களினை நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்








| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமரர்.திரு.கந்தையா சயானந்தன் | அமரர்.செல்வி.கதிரவேலு செல்லம்மா | அமரர்.திருமதி.செல்லன் மகேஸ்வரி | அமரர்.திருமதி.மயிலன் கஜேந்தினி | அமரர்.திரு.மாதையா நாகராசா | அமரர்.திரு.உலகர் நாகமணி |
| வயது : | 70 | 76 | 78 | 69 | 74 | 96 |
| முகவரி: | அல்வாய், கரவெட்டி | கணேஸ்வரம், அளவெட்டி | ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் | திருகோணமலை | பூநகரி | சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய் |
| அனுமதித்த திகதி: | 20.03.2012 | 05.06.2024 | 26.05.2022 | 25.02.2022 | 27.02.2020 | 07.07.2018 |
| இயற்கை எய்திய திகதி | : 28.10.2024 | 06.11.2024 | 04.12.2024 | 07.12.2024 | 09.12.2024 | 31.12.2024 |








| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமரர்.செல்வி.தம்பிஐயா மணிமேகலை | அமரர்.திருமதி.வீரவாகு செல்லம்மா | அமரர்.திரு.அந்தோனி யுவானிஸ் முறாயிஸ் | அமரர்.திரு.கந்தையா பாலகிருஸ்ணன் | அமரர்.திருமதி.சோமஸ்கந்தசர்மா நாகேஸ்வரி | அமரர்.திரு.கதிரன் கந்தையா |
| வயது : | 80 | 86 | 84 | 76 | 71 | 77 |
| முகவரி: | 12ம் வட்டாரம், புங்குடுதீவு | குரும்பசிட்டி, தெல்லிப்பளை | வங்காலை, மன்னார் | அராலி மத்தி, வட்டுக்கோட்டை | கோப்பாய் தெற்கு, கோப்பாய் | நவபுரம் கைதடி கிழக்கு, கைதடி |
| அனுமதித்த திகதி: | 21.05.2022 | 07.06.2023 | 12.12.2023 | 29.01.2019 | 15.06.2009 | 14.07.2016 |
| இயற்கை எய்திய திகதி | 18.01.2025 | 27.01.2025 | 02.02.2025 | 20.03.2025 | 20.03.2025 | 24.03.2025 |








| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமரர்.திரு.சின்னப்பொடி பொன்னையா | அமரர்.திரு.செல்லத்துரை செந்தில்நாதன் | அமரர்.திரு.சிதம்பரநாதன் செல்லத்துரை | அமரர்.திருமதி. குமாரசேகரம் உமாதேவி | அமரர்.திருமதி.புவனேஸ்வரன் தவபூசணம் | அமரர்.திருமதி. இந்திரன் இந்திரகுமாரி |
| வயது : | 93 | 75 | 76 | 71 | 68 | 63 |
| முகவரி: | மதவடி லேன்,கட்டுடை, மானிப்பாய் | குரும்பன், ஏழாலை மேற்கு, ஏழாலை | அளவெட்டி வடக்கு, அளவெட்டி | 297, ஹேகித்த, வத்தளை | புதுக்கிணத்தடி, வதிரி, கரவெட்டி | வேலணை வடக்கு, வேலணை |
| அனுமதித்த திகதி: | 17.10.2016 | 04.01.2023 | 08.11.2023 | 12.04.2018 | 19.09.2000 | 25.08.2023 |
| இயற்கை எய்திய திகதி | 07.04.2025 | 13.04.2025 | 14.04.2025 | 04.05.2025 | 09.05.2025 | 11.05.2025 |








| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமரர்.செல்வி.சீனியன் இராசமணி | அமரர்.திரு.தம்பையா தனபாலசிங்கம் | அமரர்.திருமதி. நவரத்தினம் விவேகானந்தாதேவி | அமரர்.திருமதி.ஜெயரட்ணம் பாக்கியம் | அமரர்.செல்வி . பரராஜசிங்கம் லோகநாயகி | அமரர்.திருமதி . தர்மலிங்கம் சந்திரகலா |
| வயது : | 74 | 90 | 81 | 92 | 72 | 71 |
| முகவரி: | வடயந்தோட்டம் , கரணவாய் மேற்கு, மண்டான் | வல்லியுரக்கோயிலடி, வல்லியுரம் | மயிலுவீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை | சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் | சோழர் கிணற்றடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை | அல்வின் வீதி,காரைநகர். |
| அனுமதித்த திகதி: | 04.01.2019 | 10.07.2025 | 03.02.2004 | 21.02.2018 | 31.12.2022 | 23.02.2021 |
| இயற்கை எய்திய திகதி | 12.05.2025 | 13.05.2025 | 16.05.2025 | 16.05.2025 | 17.05.2025 | 19.05.2025 |








| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமரர்.திருமதி. சுந்தரலிங்கம் ஜெயலட்சுமி | அமரர்.திருமதி.மகாலிங்கம் ஜீவரட்ணம் | அமரர்.செல்வி.நாகன் ஜெகதீஸ்வரி | அமரர்.திருமதி.யுகராசா ஜெகதீஸ்வரி | அமரர்.திரு.பரமானந்தப்பிள்ளை திருநாவுக்கரசு | அமரர்.திரு.இராசேந்திரம் பாலசுந்தரம் |
| வயது : | 85 | 81 | 61 | 72 | 82 | 82 |
| முகவரி: | நுணாவில் மத்தி, நுணாவில | கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளை | அராலி தெற்கு, வட்டுக்கோட்டை | கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் | வட்டுக்கோட்டை தென்மேற்கு, வட்டுக்கோட்டை | 8ம், வட்டாரம், மண்டைதீவு |
| அனுமதித்த திகதி: | 13.06.2024 | 28.02.2023 | 20.03.2017 | 11.11.2002 | 31.10.2018 | 10.04.2025 |
| இயற்கை எய்திய திகதி | 21.05.2025 | 23.05.2025 | 02.06.2025 | 17.06.2002 | 04.09.2025 | 21.04.2025 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமரர்.திருமதி.இராமநாதன் ஆனந்ததேவி | அமரர்.திரு. ஆறுமுகம் மீனாம்பிகை | அமரர்.திருமதி.ஜெயராசா மகேஸ்வரி | அமரர்.திரு.சவரிமுத்து சச்சிதானந்தன் | அமரர்.திரு.பொன்னம்பலம் நடராசா | அமரர்.திரு.விஜயரத்தினம் ஸ்ரீதரன் |
| வயது : | 81 | 79 | 87 | 79 | 74 | 71 |
| முகவரி: | "அன்னவிலா" கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம் | விக்னேஸ்வரா வீதி, ஆதியிட்டி தெற்கு, காங்கேசன்துறை | V.T.S. லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய | கே.கே.எஸ்.வீதி, இனுவில், சுன்னாகம். | குமிழமுனை மத்தி, குமிழமுனை | யாழ்போதனா வைத்தியசாலை மூலம் அனுமதிக்கப்பட்டவர் |
| அனுமதித்த திகதி: | 26.03.2025 | 17.03.2025 | 26.12.2024 | 22.04.2025 | 09.06.2025 | 15.04.2025 |
| இயற்கை எய்திய திகதி | 26.04.2025 | 08.05.2025 | 13.05.2025 | 20.05.2025 | 09.07.2025 | 22.08.2025 |

| | | |
|---|---|---|
| | அமரர்.திருமதி.கிருஸ்ணன் பூமணி | அமரர்.திரு.முத்துவேலு சிவராசா |
| வயது : | 78 | 78 |
| முகவரி: | தவசிக்குளம், மிருசுவில் | 103/15 முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் |
| அனுமதித்த திகதி: | 15.04.2025 | 04.08.2025 |
| இயற்கை எய்திய திகதி | 27.08.2025 | 17.09.2025 |

அரச முதியோர் இல்லம்,
கைதடி

**அத்தியட்சகர், அலுவலர்கள்**
**மற்றும்**
**இல்ல வாழ் முதியவர்கள்**

(CR/46436) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் தின விழா

கைதடி அரசினர் முதியோர் இல்லத்தின் முதியோர்தின விழா முதியோர் இல்ல அத்தியட்சகர் இராஜமனோகரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை கைதடி அரசினர் முதியோர் இல்ல மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்டப் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். விழாவின் இறுதியில் மூத்தோர்கள், சிறுவர்கள் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர். (ச-41-66)






உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சினால் குடியிருப்பாளர்களுக்கான குடியிருப்புச் சான்றிதழ்கள் கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகர அபிவிருத்தி நிர்மாணிப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தீபானி பிரியங்க, மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், கரைச்சி, கண்டாவளை, பூநகரி பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 55)



ஊரெழு கணேச வித்தியா சாலையின் "வாணி விழாவும் சிறுவர்தின விழாவும்" அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன. விழாவில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழையமாணவனான தி.உதயசூரியன், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் சைவப் புலவர் செ.பரமேஸ்வ ரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25)



# நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஒக்.7

இ.சு.முரளிதரனின் 'வியாக்ரன்' நூல் அறிமுக விழா வித்தியாலய அதிபர் கே.கே.தவகீஸ்வரன் தலைமையில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறைத் தலைவர் கலாநிதி த.செல்வமனோகரன் அறிமுகவுரையையும், யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் கருத்துரையையும் ஆற்றினர். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி ஷாயினி வித்தியானந்தன் செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் குறித்த நூலுக்கான ஓவியங்களை உருவாக்கியதுடன் இந்நூல் ஜீவநதி கொமிக்ஸின் வெளியீடாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-41-20)

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 04 . 1972



மறைவு
06 . 10 . 2025

## தியாகராசா மோகனதாஸ்

திருகோணமலை கூனித்தீவை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா மோகனதாஸ் அவர்கள் கடந்த (06.10.2025) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் அன்னலக்ஸ்மி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், உமாபதியின் அன்பு கணவரும், லக்சன், டிலக்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பற்குணநாதன், பிரேமதாஸ், சந்திரதாஸ், மற்றும் கிருஸ்ணபிரபா, சூரியபிரபா ஆகியோரின் அன்பு சகோதரரும், சுபாஜினி, சயந்தினி, கஜேந்திரன், அஜந்தினி, திரிசாந்தி, சனாதனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 614 6488



சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகங்க ளில் பயன்படுத்தப்பட்ட சஞ்சிகைகளை, மாணவர்களின் பயன்பாட்டுக்காகப் பாடசாலைகளுக்கு வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி பொதுநூலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய பொது நூலகங்களில் பயன்படுத்திய சஞ்சிகைகள் மற்றும் நூல்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டுக்காக பிரதி அதிபரிடம் நகரசபைத் தவிசாளர் வ. [illegible] வழங்கிவைத்தார். (ச-25, 9,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்றொழில், நீரியல்வள மற்றும் சமுத்திர வள அமைச்சு

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

NAQDA

## உள்ளூர் முதலீட்டாளர்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்களுக்கான அழைப்பு!

**மீன்வளர்ப்புத் துறையில் உள்ளூர் தொழில்முனைவோருக்கான வாய்ப்பு.**

01. நீரியல்வள மற்றும் சமுத்திர வள அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரின செய்கை அபிவிருத்தி அதிகாரசபையானது ஏற்றுமதி சார்ந்த கடல் அட்டை (Sea cucumber) உற்பத்திக்குத் தேவையான கடல் அட்டை குஞ்சுகளை (Sea cucumber juveniles) உற்பத்தி செய்வதற்காக உள்ளூர் முதலீட்டாளர்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்களை நிறுவி இயக்குவதற்கு தீர்மானித்துள்ளது.

02. கடல் அட்டை (Sea cucumber) வளர்ப்பிற்காக ஒரு நபருக்கு 1 ஏக்கர் வழங்கப்படும். 6 ஏக்கர் பரப்பளவில் 14 அலகுகள் நிறுவப்படும் (மொத்தம் 84 ஏக்கர்). கடல் அட்டை (Sea cucumber) உற்பத்தி செய்யும் திறன் கொண்ட, 6 மாதங்களுக்குள் மாதத்திற்கு தேவையான எண்ணிக்கையிலான கடல் அட்டை குஞ்சுகளை (Sea cucumber juveniles) உற்பத்தி செய்யும் திறன் கொண்ட குஞ்சு பொரிப்பகம் ஒன்றினை நிறுவுவதற்கு நிலத்தில் 5 ஏக்கர் பொருத்தமான நிலம் வழங்கப்படும்.

03. கடல் அட்டை (Sea cucumber) வளர்ச்சிக்காக வலை அடைப்புக்களினுள் குஞ்சுகளை சேமித்து வைப்பதற்கு முன், வலை அடைப்புக்களில் பராமரிக்கப்பட வேண்டியிருப்பதால், கடல் அட்டை குஞ்சு வளர்ப்பு அடைப்புக்களை (nursery pen) நிறுவுவதற்கு 10 ஏக்கர் வலை அடைப்புக்களைத் தயாரிக்க ஒவ்வொரு குஞ்சு பொரிப்பகத்திற்கும் 20 ஏக்கர் கடல் நிலத்தையும், கடல் அட்டை வளர்ப்பிற்கான 10 ஏக்கர் வலை அடைப்புக்களையும் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

04. மேலே குறிப்பிட்ட திறன் அல்லது அதற்கு மேற்பட்ட திறன் கொண்ட குஞ்சு பொரிப்பகத்தை நிறுவுவதற்காக தனியொரு தொழில்முனைவோர் அல்லது தனி நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்காக ஆர்வம் காட்டும் தரப்பினர், விரிவான திட்ட அறிக்கையை **தலைவர், இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை, இல-41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு 2025.10.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாக அனுப்பலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம்.

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**
**பணிப்பாளர் (கரையோரம்)**
**தொ.பே : +94 11-278 6578 / +94 11-278 6577 / +94 71-819 6823**
**மின்னஞ்சல் : directorcad@naqda.gov.lk**

தலைவர்,
இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA)
2025.10.07




வெடுக்குநாறிமலை

# ஆதிசிவன் ஆலயத்தினரிடம் மீண்டும் ரி.ஐ.டி. விசாரணை!

முல்லைத்தீவு, ஒக். 7

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளரை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவுப் பொலிஸார் அழைத்துள்ளார்கள்.

வவுனியா, நெடுங்கேணி பொலிஸார் ஊடாக குறித்த அழைப்பாணைக் கடிதங்கள் நேற்று வழங்கப்பட்டன. இதன்படி, வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் தலைவரும், செயலாளரும் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 10 மணிக்கு வவுனியாவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் சிவாரத்திரி தினத்தன்று குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், தற்போது ஆலயத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு பல மாதங்கள் ஆகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-18)



காணி விற்பனைக்கு

நல்லூர் குறுக்கு வீதியில் 6 3/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு

077 364 0941,076 466 6148


## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 01 . 1978



மறைவு 06 . 10 . 2025

### கந்தசாமி தர்சனன்

**(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி மேற்கு, சங்கானை)**

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டு தென்மேற்கு வட்டுக்கோட்டையை (சங்கரத்தை) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தர்சனன் நேற்று (06.10.2025) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - அரியமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகரணியின் (ஆசிரியர், யா/வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாலயம்) பாசமிகு கணவரும், மேருக்சன், பிரவீன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தூரன் (பொறியியலாளர்), சுகந்தியா (ஜேர்மனி), தர்சினி (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செங்கமலச்செல்வி (சுற்றாடல் உத்தியோகத்தர்) காலஞ்சென்ற ரவிச்சந்திரன் (ஜேர்மனி), புவிராஜ், சிவாஜினி (சுவிஸ்), சிவயோகினி (சுவிஸ்), சிவந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜதுயன், நித்திலா, சுஜீபனா, வினோஜன், பர்ணிதா, சன்விகா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், டிலோஜன், டினுஜா, மதுசா, கவீனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2025) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை (சங்கரத்தை) இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 90 86 483
074 01 36 722

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 05 . 1946



மறைவு 05 . 10 . 2025

### ஐயாத்துரை சரவணபவானந்தன்

**(பெரியானந்தம் - மட்டுவில்)**

மட்டுவில் வடக்கு, சிவன்கோவில் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சரவணபாவனந்தன் அவர்கள் கடந்த 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை இரவு இறைவனடி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கவிதா (லண்டன்), துசிதா (அவுஸ்திரேலியா), சுமித்திரா (லண்டன்), தர்சிகா (பிரான்ஸ்), சிவதர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபாகரன், துசிகரன், சயரூபன், சாயிஷங்கர் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜின், அருண், கபிஷ்னா, அனிஷ், சஞ்சய், யஸ்மின், சற்வின், திர்வான், விஹானா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், முத்தம்மா காலஞ்சென்ற சந்திரன் ஆகியோரின் அன்பு அண்ணாவும், பேரின்பநாதன் (சுவிஸ்), யோகராசா (சுவிஸ்), நடராசா, சறோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில், சாவகச்சேரி
075 84 64 395
077 48 02 662

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 46440) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரேபிக் கடலில் துறைமுகம்; பாக். போடும் புதிய திட்டம்!

இஸ்லாமாபாத், ஒக்.7

அரேபிக் கடலில் புதிய துறைமுகம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ள பாகிஸ்தான், அதற்காக அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் மற்றும் இராணுவத்தளபதி ஆகியோர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான சந்திப்பில் இதுதொடர்பாகப் பிரஸ்தாபித்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள கனிம வளங்கள் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது என்றும், அதற்காக குவாதர் மாவட்டம் அருகே உள்ள கடற்கரை நகரமான பாஸ்னியில் புதிய துறைமுகம் ஒன்றை அமைக்கபாகிஸ்தான்திட்டமிட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இங்கு சிவில் துறை முகத்தை அமெரிக்கா உருவாக்கலாம் என்றும், இந்தத் துறைமுகத்தை அமைக்கவும், இயக்கவும் அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

# இந்தியா, பிரிட்டன் கூட்டுக்கடற்பயிற்சி

புதுடில்லி, ஒக்.7

இந்தியா, பிரிட்டன் இடையிலான கூட்டுக் கடற்பயிற்சி மேற்கு இந்தியப் பெருங்கடலில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

கடற்படையின் வலிமையை வெளிப்படுத்தும் விதமாக, இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சுமார் 40 நாடுகளுடன் தனித்தனியாக கூட்டுப்பயிற்சியை பிரிட்டன் மேற்கொண்டுவருகின்றது.

அதன் ஒரு பகுதியாக, இந்தியா மற்றும் பிரிட்டன் இடையிலான கூட்டுக் கடற்பயிற்சி இந்தியப் பெருங்கடலின் மேற்குப் பகுதியில் ஆரம்பமாகியுள்ளது. இந்தப் பயிற்சி எதிர்வரும் 12ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தியாவின் சார்பில் ஐ.என்.எஸ். விக்ராந்தும், பிரித்தானியா தரப்பில் எச்.எம்.எஸ். பிரின்ஸ் ஒப் வேல்ஸ் விமானம் தாங்கிக் கப்பலும் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. (ஏ-இ)

## கார்...

குருநாகலை நோக்கிச் சென்ற காரே, கட்டுப்பாட்டை இழந்து வீதியால் நடந்து சென்ற பெண்களை மோதித்தள்ளியுள்ளது.

காரைச் செலுத்திய பெண்ணும், இன்னொரு பெண்ணும் படுகாயமடைந்த நிலையில், அவர்கள் கம்பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்கள் சுமார் 60 வயது மதிக்கத்தக்கவர்கள் எனத் தெரியவருகின்றது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம)

## வல்லிபுர...

அடியவர்களின் பங்கேற்புடன் மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது. (அ-ம-66-100)

## காணி...

நிறைவேற்றிய சட்டத்தரணியே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினார்கள். இதையடுத்து, கைதான சட்டத்தரணியை 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, வெளிநாட்டு பயணத் தடையையும் விதித்துள்ளது. (அ-ம-26)

## இன்னும்...

மோசடிகளுடன் தொடர்புடைய விசாரணைகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்று, மேலதிக நடவடிக்கைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. எனினும், கடந்த அரசாங்கங்களின் காலத்தில் வழங்கப்பட்ட சில உத்தரவுகள் தற்போது ரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே, அந்தச் சட்டத்தரணிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

தாம் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக, சட்டத்தரணிகள் சிலர் நீதிமன்ற நடவடிக்கைகளை ஏற்கனவே முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது. இதேவேளை, பொலிஸாரின் கைதுப் பட்டியலில் உள்ள சில சட்டத்தரணிகள் கடந்த சில நாள்களாகத் தலைமறைவாக உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (அ-ம-20-26)

## அனுமதியின்றித்...

சட்டத்தரணிகள் சிலருக்கு எதிராக, அண்மைய நாள்களாக பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இதன்போது, காணி மோசடி விடயத்தில் நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல், சட்டத்தரணியொருவரின் அலுவலகத்தில் பொலிஸார் தேடுதல் நடத்தியதாகக் கூறப்படுகின்றது. இதைக் கண்டித்தே, இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. (அ-ம-20-26)

## சிங்கள...

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் போது, சிவாஜிலிங்கம் மேலும் கூறியதாவது:-

தையிட்டி திஸ்ஸ விகாரையை அப்புறப்படுத்திவிட்டு, அந்தக் காணியைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தி மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். திஸ்ஸ விகாரைப் பிரச்சினை இந்த வாரம் தீர்க்கப்படும், அடுத்தவாரம் தீர்க்கப்படும் என்று கூறிக்கூறி தற்போதைய அரசாங்கம் காலம்கடத்தி வருகின்றது. ஒரு கட்டத்தில் மக்கள் களைப்படைந்து விடுவார்கள் அல்லது போராட்டத்தைக் கைவிட்டு விடுவார்கள் என்ற நோக்கத்தில்தான் இந்த இழுத்தடிப்பை மேற்கொள்கின்றனர்.

அரசாங்கத்தின் இந்தச் சதிச்செயல்களுக்குள் நாங்கள் அகப்படமாட்டோம். கடந்த அரசாங்கங்களுக்கும், தற்போதைய அரசாங்கத்துக்கும் இடையில் பெரிய வேறுபாடுகள் இல்லை. எனவே, சிங்கள ஆட்சியாளர்களின் போலி வாக்குறுதிகளை நம்பி போராட்டத்தைக் கைவிடமாட்டோம் - என்றனர். (அ-ம-113)

## 13இனை...

போரை முடிவுக்குக் கொண்டுவந்து வடக்கிலும் மாகாணசபைத் தேர்தலை மஹிந்த ராஜபக்ச நடத்தி இருந்தார். ஆனால் அவருக்கு பிறகு வந்த ஜனாதிபதிகளால் மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியாமல் உள்ளது. இது வெட்கக்கேடான விடயமாகும்.

அதிகாரத்துக்காக கொள்கையைக் கைவிடும் கட்சி அல்ல எமது கட்சி. தேர்தலில் வென்றாலும், தோற்றாலும் கொள்கைகளை கைவிட்டது கிடையாது. சில கட்சிகள் தேர்தல் வெற்றிக்காக தமது கொள்கையை மாற்றுகின்றன. அதேபோல பொய்களையும் கூறுகின்றன. இப்படியான கட்சிகளுக்கு அழிவு நிச்சயம்.

செய்யக்கூடிய விடயங்களை மட்டுமே எமது கட்சி கூறிவருகின்றது. 13 ஆவது திருத்தத்தைத் தருகின்றோம், அதைத் தருகின்றோம், இதைத் தருகின்றோம் என எம்மாலும் கூறி இருக்க முடியும். ஆனால், நாங்கள் மக்களை ஏமாற்ற விரும்பவில்லை. 13ஆவது திருத்தத்தைத் தருவோம் என்று கூறியவர்களால், வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த இயலவில்லை - என்றார். (அ-ம-44)

## 'ஓ பொசிடிவ்'...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் 'ஓ பொசிடிவ்' குருதி வகைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே, தற்போது தட்டுப்பாடு மேலும் தீவிரமாகியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, 'ஓ பொசிடிவ்' வகை குருதி உடையவர்கள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேரடியாக வருகைதந்து குருதிக் கொடையில் ஈடுபடுமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-66)

## மோ.சைக்கிள்...

தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சாம்பல்தோட்டம் பகுதியைச் சேர்ந்த கோபால்ராஜ் நிலக்சன் (வயது-18) என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா, இராசேந்திரகுளம் பகுதியில் இருந்து நெளுக்குளம் நோக்கி மூன்று இளைஞர்கள் குறித்த மோட்டார்சைக்கிளில் பயணித்துள்ளனர். இதன்போது, மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, இராசேந்திரகுளம் பாடசாலைக்கு முன்பாகவுள்ள பேருந்துத் தரிப்பிடத்துடன் மோதியுள்ளது. இதையடுத்தே, மோட்டார்சைக்கிளில் பயணித்த மேற்படி இளைஞர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-18-110)

## இலங்கை...

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த மாதத்தில் பிரேரணையின் முதலாவது வரைவு சமர்ப்பிக்கப்பட்டு, அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்தே, நேற்று பிரேரணையின் 'திருத்தப்பட்ட இறுதி வடிவம்' சமர்ப்பிக்கப்பட்டது.

பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்களுக்கு இலங்கை கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்தது. குறிப்பாக, வெளியக விசாரணைகளையும், சாட்சியங்களைத் திரட்டும் நடவடிக்கையையும் இலங்கை கடுமையாகக் கண்டித்தது. இந்தச் செயற்பாடுகள், இலங்கையின் இன ஒற்றுமையைச் சீர்குலைக்கும் என்றும் இலங்கையின் பிரதிநிதி சுட்டிக்காட்டினார்.

எனினும், வாக்கெடுப்பில் பிரேரணை நிறைவேறக்கூடிய பெரும்பான்மை ஆதரவு இருந்தாலும், பிரேரணையை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரிட்டன் கோரிக்கை விடுத்திருந்தது. இலங்கை அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதையடுத்தே, வாக்கெடுப்பின்றி பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

பிரிட்டனின் பிரேரணைக்கு ஏற்கனவே ஐந்து நாடுகள் இணையனுசரணையை வழங்கியிருந்த நிலையில், நேற்று மேலும் 22 நாடுகள் இணையனுசரணை வழங்கின என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

# பலஸ்தீன ஆதரவுப் போராட்டம் எச்சரிக்கை விடுத்த பிரிட்டன்




லண்டன், ஒக.7

**பிரிட்டனில் தடைசெய்யப்பட்ட பலஸ்தீன ஆதரவுக்குழுவுக்கு ஆதரவாக நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப் படுத்த அதிகளவிலான அதிகாரத்தைப் பிரிட்டன் பொலிஸார் பயன் படுத்தவேண்டியிருக்கும் என்று பிரிட்டன் அரசாங்கம் நேற்றுமுன் தினம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இஸ்ரேல்-காஸா போரின் தொடக் கத்திலிருந்து பலஸ்தீனத்துக்கு ஆதரவாக பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றன. இந்த நிலையில் பிரித்தானிய இராணுவ விமானங்கள் மற்றும் இஸ்ரேல் இராணுவத்துக்குத் தொடர்புடைய தளங்களைச் சேதப்படுத்திய 'பலஸ் தீன் அக்ஷன்' என்ற அமைப்பை தடைசெய்யப்பட்ட அமைப்பாக பிரிட்டன் அரசாங்கம் அறிவித்தது. அந்த அமைப்புக்கு ஆதரவாகச் செயற்படுவது சட்டவிரோதமானது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இந்த அமைப் புக்கு ஆதரவாக மத்திய லண்ட னின் டிராபல்கர் சதுக்கத்தில் ஆயி ரக்கணக்கானோர் கடந்த சனிக் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர். அவர்களில் 488 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பில் பிரிட்டன் உள்நாட்டு அமைச்சர் ஷாபனா மஹ்மூத் தெரி வித்துள்ளதாவது- "ஆர்ப்பாட்டம் நடத்தும் உரிமை நாட்டின் அடிப் படைச் சுதந்திர உரிமையாகும். இருப்பினும், இந்தச் சுதந்திர உரி மையை மக்கள் பயமின்றி வாழ்வ தற்கான உரிமையுடன் சமமாகக் கருதவேண்டும். பெரிய அளவில் தொடர்ச்சியாக நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், நாட்டில் உள்ள சில மக்களிடம் குறிப்பாக மதக்குழு வினரிடம் பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது"- என்றார். (எ-இ)

# மரநடுகை

கிளிநொச்சி, ஒக்.7

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூறு மரங்கள் நடுதல் நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை கல் லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது. 1927ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 2027ஆம் ஆண்டு கொண்டாடுவதற்கான திட்டமிடல்கள் மேற்கொள் ளப்பட்டுவருகின்றன. மத்திய கல்லூரியின் முன் னாள் அதிபர் சின்னத்தம்பியின் ஞாபகமாக அவரது பேரன் யோகலிங்கம் புஸ்பராஜாவின் நிதிப்பங்களிப்பில் இந்த மரநடுகை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-41)

வேலையாட்கள் தேவை
வெல்டிங்
வேலையாட்கள் தேவை
தொடர்பு: 076 660 1600

# தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டிகள் வட மாகாணத்துக்கு 16 தங்கப்பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.7

கல்வி அமைச்சின் தமிழ்மொழி அலகால் நடத்தப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட தமிழ்த் தினப் போட் டிகளில் வட மாகாணம் முதலிடம் பெற்றுள்ளது. இந்தப் போட்டிகள் கொழும்பு முகத்துவாரம் விவேகானந்தக் கல்லூ ரியில் அண்மையில் நடைபெற்றிருந்தன.

தனி மற்றும் குழு சார்ந்த 44 போட்டிகளில் வட மாகாணம் 16 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று ஒன்பது மாகாணங்க ளுக்குள் முதல் இடத் தைப்பிடித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட் டது. (எ-25,9)

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 06 . 1951



மறைவு
06 . 10 . 2025

**பாலசுப்பிரமணியம் மனோரஞ்சிதம் (ராணி)**

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் மனோரஞ்சிதம் (ராணி) அவர்கள் நேற்று (06.10.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - ரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் மனைவியும், காலஞ்சென்ற கதிர்காமர் - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசேஸ்வரி, தவமணி, வேலாயுதம்பிள்ளை, பரமநாதன், தவஞான அமிர்த சிவசக்தி, கனகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், மஞ்சுளா, கோபி ஆகியோரின் தாயும், முகுந்தன், பாமினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அஹிங்கர், சிவானி, சிவாந்தி, கிர்த்திகன், ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று (இணுவில்) தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் தெற்கு,
இணுவில்

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 46440) A

# சிட்னியில் சூடு: 20 பேர் காயம்!

சிட்னி, ஒக்.7

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 21 பேர் காயமடைந்துள்ளனர். அவர் களில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

புறநகர்ப் பகுதியான குராய்டன் பூங்காவில் இந் தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. 50 முதல் 100 முறை துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டிருக்க லாம் என்று உள்ளூர்ப் பொலிஸ் அதிகாரி தெரி வித்துள்ளார். துப்பாக்கிச்சூட்டை நடத்திய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் 60 வயதுடையவர் என்றும், சந்தேகநபரிடம் இருந்து இருரைபிள்வகைத்துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# மீட்கப்பட்ட இராசயனத்தின் ஆய்வறிக்கை இந்த வாரம்

கொழும்பு, ஒக்.7

கந்தானையில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் எனச் சந்தேகிக்கப்படும் இரசாயனப்பொருள் தொடர்பான ஆய்வறிக்கை, இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் என்றுதே சிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித் துள்ளது. மித்தெனிய மற்றும் தங்காலை நெடோல்பிட்டிய பகுதிகளில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் ஐஸ் போதைப்பொருள் என உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித் தது. (எ-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org